


19.04.2024

தலைப்புச் செய்திகள்

1. நாடுமுழுவதும் 102 மக்களவை தொகுதிகளுக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

2. தமிழ்நாட்டில் 39 மக்களவை தொகுதிகளில் வாக்குப்பதிவு சுமூகமாக நடைபெறுவதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

3. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது

4. நாட்டு மக்கள் அதிகளவில் திரண்டு வந்து வாக்களிக்க குடியரசு தலைவரும், பிரதமரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்று சென்னை சூப்பர் கிங்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

வாக்குப்பதிவு

நாடுமுழுவதும் தமிழ்நாடு உட்பட 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களில், 102 மக்களவை தொகுதிகளுக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருகிறது.

ராஜஸ்தான், உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், மஹாராஷ்டிரா, உத்தரகாண்ட், அசாம், பீஹார், மேற்கு வங்கம், அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, சட்டீஸ்கட், மிசோரம், நாகலாந்து, சிக்கிம், திரிபுரா மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகள், ஜம்முகாஷ்மீர், லட்சத்தீவு, புதுச்சேரி யூனியன் பிரதேசங்களில் இந்த தொகுதிகள் அமைந்துள்ளன.

இத்தேர்தலில் 134 பெண்கள் உட்பட ஆயிரத்து 625 வேட்பாளர்களின் வெற்றியை 16 கோடியே 63 லட்சம் வாக்காளர்கள், நிர்ணயிக்க உள்ளனர்.

இதற்கென 1 லட்சத்து 87 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன

36 லட்சம் முதல்முறை வாக்காளர்கள் இந்த முதல்கட்ட தேர்தலில் தங்களது வாக்குகளை செலுத்துகின்றனர்.

பெரும்பாலான பகுதிகளில் காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை தொடர்ந்து நடைபெறுகிறது.

வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் மலை மாநிலங்களில் வாக்குப்பதிவு மாலை 5 மணிக்கு முடிவடையும்.

நக்சல் தீவிரவாதம் உள்ள பகுதிகளில் மாலை 4 மணிக்கு நிறைவடையும்.

முதல் கட்ட வாக்குப்பதிவில் 85 வயதிற்கு மேற்பட்ட 14 லட்சம் வாக்காளர்களும்,

14 லட்சம் மாற்றுத்திறனாளிகளும், வீடுகளிலிருந்து வாக்களிப்பதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளது.

வாக்குமையங்களில், வாக்காளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் தேர்தல் ஆணையம் உறுதி செய்துள்ளது.

தேர்தல் நடைமுறைகளை 361 நுண்பார்வையாளர்கள் கண்காணித்து வருகின்றனர்.

விதிமுறைகளை மீறி வாக்காளர்களை ஊக்குவிக்கும் செயல்களை தடுப்பதற்காக 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறக்கும் படையினர், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்காணிப்பு அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மாநில மற்றும் சர்வதேச எல்லை பகுதிகளில் பணம் மற்றும் போதை பொருட்கள், இலவச பரிசு பொருட்களை தஹடுப்பதற்கான நடைமுறைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

கடல் மற்றும் வான் மார்க்க கண்காணிப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

□□□□□□□

வாக்குப்பதிவு சதவிகிதம்

பகல் 1 மணி நிலவரப்படி தமிழ்நாட்டில் 39.51 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன

சிவகங்கையில் 34.1

நாகையில் 43.1

பெரம்பலூர் 48.86

திருவண்ணாமலை 39

ஆரணி 30

சேலத்தில் 47 வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 40 மக்களவை தொகுதிகளிலும் வாக்குப்பதிவு இன்று அமைதியாகவும், விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது

□□□□□□□

சற்றுமுன் கிடைத்த தகவலின் படி

புதுச்சேரியில் 44.95 சதவிகித வாக்குகளும்,

உத்ரகாண்ட் 37.33

உத்தரபிரதேசம் 36.96

அருணாச்சல பிரதேசம் 36.16

மேகாலயா 48.99

மஹாராஷ்டிரம் 32.36

மேற்குவங்கம் 50.96 சதவிகித வாக்குகளும் பதிவாகி உள்ளன

□□□□□□□

வாக்குப்பதிவு தலைவர்கள் தமிழ்நாடு

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னை ஆழ்வார் பேட்டை ளுஐநுவு கல்லூரி வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தினார்

வாக்களிக்கும் உரிமை பெற்ற அனைவரும் வாக்களிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அஇஅதிமுக பொதுச்செயலளார் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி சேலம் சிலுவம்பாளையத்திலும்,

மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் சென்னை கோயம்பேடு வாக்குச்சாவடி மையத்திலும்

பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை கரூர் தொட்டம்பட்டியிலும் வாக்களித்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு. சுப்பராயன்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வபெருந்தகை

விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் திரு. தொல். திருமாவளவன் உள்ளிட்டோரும் தங்களது வாக்குகளை இன்று காலையிலேயே செலுத்தினர்

திரைப்பட நடிகர்கள் ரஜினிகாந்த், கமலஹாசன், அஜித்குமார், விஜய் உள்ளிட்டோரும் வாக்கு செலுத்தினர்.

முதியவர்கள் மாற்றுத்திறனாளிகள் முதல்முறை வாக்களார்கள் ஆர்வத்துடன் வாக்களித்து வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

□□□□□□□

சத்யபிரதாசாகு

சென்னை நெற்குன்றத்தில் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதசாகு தனது வாக்கை பதிவுசெய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர் மாநிலத்தில் முதற்கட்ட வாக்குப்பதிவு சுமூகமாக நடைபெற்று வருவதாக கூறினார்

மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பழுதானால் மாற்று இயந்திரங்கள் தயாராக வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

வாக்காளர்கள் தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் உதவி செயலியின் இணையதளத்தில் சோதனை செய்து பெயர் இடம்பெற்றிருப்பதை உறுதி செய்துகொள்ளலாம் என கூறினார்.

முதல்முறை வாக்காளர்களும் இளைஞர்களும் அதிக ஆர்வத்துடன் வாக்களிப்பதாக கூறியஅவர், இதனால் வாக்கு எண்ணிக்கையும், வாக்கு சதவிகிதமும் அதிகமாகும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்

மாலை 6 மணிக்குள் வாக்குச்சாவடிகளுக்கு வருகைதரும் அனைத்து வாக்காளர்களுக்கும் டோக்கன் வழங்கப்படும் என்றும்,

இரவு 8 மணியானாலும் டோக்கன் பெற்றவர்கள் வாக்களிக்க அனுமதி அளிக்கப்படும் என்றார்.

□□□□□□□

சட்டப்பேரவை

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் பகல் 1 மணி நிலவரப்படி 35.14 சதவிகிதமும்,

திரிபுரா ராம்நகர் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் 43.01 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன.

அருணாச்சல பிரதேச மாநிலத்தில் மொத்தமுள்ள 60 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான தேர்தலில் 39.17 சதவிகித வாக்குகளும்,

சிக்கிம் மாநிலத்தில் 32 சட்டப்பேரவை தொகுதிகளில் 36.88 சதவிகித வாக்குகளும் பகல் 1 மணிவரை பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

□□□□□□□

தேர்தல் மாவட்டங்கள்

நாமக்கல் மாவட்டத்தில் தலைச்சுமையாக தேர்தல் உபகரணங்கள் எடுத்துச்செல்லப்பட்ட போதமலை கிராமத்தில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்கின்றனர்.

சேலம் நாடாளுமன்ற தொகுதியில் பெண் வாக்காளர்களும் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

திண்டுக்கல்லில் முதியோர்கள் அதிகளவில் வாக்களித்தனர்.

வாக்களிக்க வந்த மாற்றுத்திறனாளிகள் சிறப்பு ஏற்பாடுகள் செய்த தேர்தல் ஆணையத்திற்கு நன்றி தெரிவித்தனர்

.. வாய்ஸ் ..

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி பல்லாவரம் கண்டோன்மென்ட் பகுதியில் உள்ள அரசு பள்ளியில் நரிக்குறவர்கள் திரளாக வந்து தங்களது வாக்கை பதிவுசெய்தனர்.

வாக்கை செலுத்துவதற்காக வெளியூரிலிருந்து ரயிலில் வந்து வாக்களிப்பதாக அவர் தெரிவித்தனர்.

ஈரோடு மக்களவை தொகுதிக்கு உட்பட்ட பர்கூர் தாளவாடி, கடம்பூர் மலைப்பகுதியில் வாக்குச் சாவடிகளில் இணையதள வசதி இல்லாததால் வனத்துறையினரின் சார்பில் ஒலிபெருக்கி மூலம் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

பின்னலாடை நகரமான திருப்பூரில் தேர்தலில் வாக்களிப்பதற்காக வெளி மாவட்ட தொழிலாளர்கள் ரயில் மற்றும் பேருந்து மூலம், சென்னை, வேலூர், சேலம், ஜோலார்பேட்டை, திருச்சி உள்ளிட்ட இடங்களுக்கு புறப்பட்டு சென்றனர்

இதனால் ரயில்களில் கூட்டம் அலைமோதியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருச்சியில் முதியவர்களும், முதல்முறை வாக்காளர்களும், இளம் வாக்காளர்களும் ஆர்வத்துடன் வாக்குகளை செலுத்தினர்

வாக்களித்த அனுபவம் குறித்து அவர்கள் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை ஊராட்சிக்கு உட்பட்ட தச்சமலை, மாங்கமலை, முடவன்போற்றை உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட மலைவாழ் கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மக்கள் படகு மூலம் பேச்சிப்பாறைக்கு வந்து வாக்குகளை பதிவுசெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

கோவையில் வாக்குப்பதிவு நிலவரம் குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

□□□□□□□

தேர்தல் தலைவர்கள்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவும், பிரதமர் திரு. நரேந்திரமோடியும் மக்கள் பெருந்திரளாக வந்து வாக்களிக்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாட்டின் எதிர்கால வடிவமைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த குடியரசு தலைவர் முதல்முறை வாக்காளர்கள் தங்களுக்கு கிடைத்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி ஜனநாயக கடமையை நிறைவேற்ற அறிவுறுத்தினார்

இளையோரும், முதல்முறை வாக்காளர்களும் அதிகளவில் வாக்களிக்க முன்வர வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமாரும், நாட்டுமக்கள் வாக்குச்சாவடி மையங்களுக்கு வந்து வாக்களிக்குமாறு வலியுறுத்தினார்.

□□□□□□□

திரிபாதி

நாட்டின் புதிய கடற்படை தளபதியாக கடற்படை துணைத்தலைவர் அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி நியமனம் செய்யப்பட்டுள்ளார்

தற்போதை கடற்படை தளபதி திரு. ஹரிக்குமார் வரும் 30-ம் தேதி பணி ஓய்வு பெறுவதை அடுத்து இந்நடவடிக்கை.

அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி நாட்டிற்கு சிறப்பாக சேவையாற்றியமைக்காக பல்வேறு கவுரமிகு விருதுகளை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

□□□□□□□

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.